சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

வாராந்தப் பாடசாலை

**வாரம் 06– அலகு 11 சமச்சீர்**

**தரம் 08**

**கணிதம்** **06.06.2021 – 12.06.2021**


பெயர் :- ........................ தயாரிப்பு :- **A.R.பிரேம்குமார்** Dip in Teach Maths(Merit)

கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக **தரம் 08 கணிதப் பாடப்புத்தகத்தில் பகுதி I இல் பக்கம் 140 இலுள்ள சமச்சீர்** என்னும் பாடப்பரப்பினை வாசிக்கவும்.


01. இருபுடைச் சமச்சீருடைய தளவுரு என்றால் என்ன? என்பதனை உமது மொழிநடையில் கூறுக.

02. உமது சூழலில் அவதானித்த இருபுடைச் சமச்சீருடைய பொருட்கள் மூன்றின் பெயரைக் குறிப்பிட்டு அதனை வரைந்துக் காட்டுக.


03. பின்வரும் உருக்களுள் இருபுடைச்சமச்சீருடைய உருக்களை இனங்கண்டு அதன் இலக்கத்தை எழுதுக.




**உரு 01**




உரு 02




உரு 03



உரு 04




உரு 05



உரு 06


04. கீழே தரப்பட்டுள்ள தளவுருக்களை ஒரு தாளில் பிரதிசெய்து அதனை தனியாக வெட்டி எடுத்து காகித மடிப்பு முறையைப் பயன்படுத்தி சமச்சீர் அச்சுக்களை இனங்கண்டு அதனைப் புள்ளிக்கோட்டின் மூலம் காட்டுக.

I.




சமபக்க முக்கோணி

II.




சதுரம்

III.



ஒழுங்கான ஐங்கோணி

IV.



ஒழுங்கான அறுகோணி

**(குறிப்பு :- ஒழுங்கான பல்கோணி ஒன்றின் எல்லாப் பக்கங்களும் எல்லாக் கோணங்களும் சமமாக இருக்கும்.)**

05.கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் **பாடப்புத்தகத்தில் பகுதி I இல் (11.2) சுழற்சிச் சமச்சீர் பாடப்பரப்பை வாசிப்பதுடன் செயற்பாடு 1** இனையும் செய்துப் பார்க்க.

I. சுழற்சிச் சமச்சீர் என்றால் என்ன?

II. சுழற்சிச் சமச்சீர் வரிசை என்றால் என்ன?

III. பகுதி A இலுள்ள தளவுருவங்களுக்கான சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கையும் சழற்சிச் சமச்சீர் வரிசையும் பகுதி B இல் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் **பொருத்தமானதை இணைக்க.**

| **பகுதி A** | **பகுதி B** |
|---|---|
| 01. சதுரம் | a. ( 0 , 2) |
| 02. சமபக்க முக்கோணி | b. ( 8, 8) |
| 03. இணைகரம் | c. ( 5, 5) |
| 04. ஒழுங்கான ஐங்கோணி | d. (4, 4) |
| 05. ஒழுங்கான எண்கோணி | e. (3, 3) |

06. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) எனவும், பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் இடவும்.

I. வட்டம் பல சமச்சீர் அச்சுக்களைக் கொண்டது. ( )

II. இருபுடைச் சமச்சீர் இல்லாத தளவுருவங்களுக்கு சுழற்சிச் சமச்சீர் அச்சும் இருக்காது. ( )

III. இருசமபக்க முக்கோணிக்கு பல சமச்சீர் அச்சுக்கள் காணப்படும். ( )

IV. செவ்வகத்திற்கு நான்கு சுழற்சிச் சமச்சீர் வரிசை காணப்படும். ( )

V. " H " எனும் ஆங்கில பெரிய எழுத்து ஒரு சுழற்சிச் சமச்சீருடைய எழுத்தாகும். ( )

முயன்று பார்க்க!

உமக்கு விருப்பமான தளவுருவங்கள் அல்லது உருவங்களை வரைந்து அதன் ஒரு விளிம்பில் இரசக் கண்ணாடியை வைத்து உருவாகும் உருவை அவதானிக்க.அது எவ்வாறனது? என சிந்திக்க.

